மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Regional traditions in the works of K.Rajanarayanan

M.Babu

Part-Time Research Scholar, Department of Tamil, Madurai Kamaraj University, Madurai, India

Manuscript ID : **MT1A0010**

Volume : **1**

Issue : **1**

Month : **September**

Year : **2021**

Received: 23.08.2021

Revised: 27.08.2021

Accepted: 02.09.2021

Published: 05.09.2021

Pages : 109-115

ABSTRACT:

Literature is a mirror of time, and 'time' refers to the 'biography' of the people who comprise it. A great literary artist uses literature for such social developmental purposes. He articulates the people and events he sees in the society in which he lives, along with his thinking. There is no other literary genre that can take human life as it is, like the short story that satisfies the artist's thoughts. Thus K. Rajanarayanan's charcoal land and the lives of the mothers seem to be a paradise. The research summary of this article is intended to reveal how the methods are located for the people of Karisal land.

KEYWORDS:

Life skills of people of Karisal land, Region, Language, Child Labor

REFERENCES :

1. The Encyclopedia America, Vol.XIII, P.1033.
2. K.Rajanarayanan, Story, NCBH, Chennai, 2001.
3. Vijayalakshmi, Vattara Ilakkiyam, Manivasagar Pathippagam, Madurai, 2007.
4. K.R.Komathi, K.Rajanarayananin kathaigal, NCBH, Chennai, 2010.

கி.ராஜநாராயணன் படைப்புக்களில் வட்டார மரபுகள்

ம.பாபு,
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடி, 'காலம்' என்பது அதனை உள்ளடக்கிய மனிதர்களின் 'வாழ்வியலை' குறிப்பது ஆகும். ஒரு சிறந்த இலக்கியக் கலைஞன் இலக்கியத்தை இத்தகைய சமூக மேம்பாடு சார்ந்த குறிக்கோளுக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றான். தான் வாழும் சமுதாயத்தில் காணும் மனிதர்களையும், நிகழ்ச்சிகளையும், தன்னுடைய சிந்தனையுடன் சேர்த்துக் கலைவடிவமாக ஆக்கித் தருகிறான். மனித வாழ்க்கையை உள்ளவாறே எடுத்துக் கூறுகின்ற, கலைஞனின் எண்ணங்களைத் திருப்திபடுத்த சிறுகதைப் போல வேறு எந்த இலக்கிய வகையாலும் முடிவதில்லை. அந்தவகையில் கி.ராஜநாராயணனின் கரிசல் நிலமும், அம்மக்களின் வாழ்வியலும் ஒரு பேரதிசயம் போலத் தென்படவே கரிசல் நில மக்களின் வாழ்வியலையும், அறிவு சார்ந்த புதியவைகளைப் பற்றி மேன்மேலும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற வேட்கையின் நிமித்தமும், எளிதில் புரிந்து கொள்ள இயலாத காரண காரிய விளைவுகளைச் சமூகப் பொருளாதார மாற்றம் மற்றும் எழுச்சியின் காரணமாக நேரிட்ட பிரச்சினைகளுக்கு சரியான உகந்த தீர்வு காண்பதும், வாழ்வியல் முறைகள் கரிசல் நில மக்களுக்கு எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாக அமைகிறது.

கருச்சொற்கள்

கரிசல் நில மக்களின் வாழ்வியல், வழக்கங்கள், வட்டாரம், மொழி, குழந்தைத் தொழிலாளர்

முன்னுரை

இலக்கியங்கள் சமூக அமைப்பில் இருந்து தோற்றம் பெற்றவையாக திகழ்கின்றன. அத்தகைய இலக்கியத்தில் சமூகத்தின் வாழ்வியல் நெறி, சமயம், பண்பாடு, மரபுகள், மொழி, தட்பவெப்பநிலை, சாதி போன்ற உட்கூறுகள் கட்டமைக்கின்றன. பொதுவாக மனிதனின் பண்பாடுகள், பழக்கவழக்க மரபுகள், வாழ்வியல் தளங்கள் யாவும் சூழலின் காரணமாக மாற்றம் பெறும். இம்மாற்றம் நாட்டிற்கு நாடு, மாநிலத்திற்கு மாநிலம், மாவட்டதிற்கு மாவட்டம், ஊருக்கு ஊர்,

சாதிக்குச் சாதி, சமயத்திற்குச் சமயம் என்ற அளவில் அமையும். இலக்கியத்தில் இம்மாற்றம் நிகழ்வதற்கு அவ்விலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளன், அவனுடைய வாழ்வியல் சூழல், அவன் வாழ்கின்ற இடம் ஆகியன அடிப்படையாக அமைகின்றன. இத்தகைய பார்வையோடு கி.ரா.வின் படைப்புக்களில் வெளிப்படும் வட்டாரத்தன்மையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வட்டாரம் - விளக்கம்

“**வட்டாரம் என்பது பெரிய நிலப்பரப்பில் அடங்கிய ஒரு சிறிய பகுதியாகும். பரந்து விரிந்த நிலப்பரப்பு அனைத்தும் ஒத்த தன்மையானதாக இருப்பதில்லை. அப்பரப்பில் வாழும் மக்களின் வாழ்க்கை நெறி, பழக்கவழக்கம், பண்பாடுகள், சமய நம்பிக்கைகள், நிலத்திற்கும் மனிதருக்குமான உறவுநிலை, விவசாயநிலை என ஒவ்வொரு நிலையிலும், பரந்த நிலப்பரப்பின் மாற்றத்துடன் தான் திகழும். இம்மாற்றத்திற்குப் பரந்த நிலப்பரப்பில் உட்பகுதியாக விளங்குகிற வட்டாரந்தான் அடித்தளக் காரணமாகும். ஒரே பகுதியைத்தான் வட்டாரம் என்று அழைக்கின்றோம்.**” (Induprakash Pandy, Regionalisim in Hindi Novels, P.1) என இந்து பிரகாஷ் பாண்டே வட்டாரம் என்பதற்கு விளக்கம் தருகின்றார். உலகின் எப்பகுதியாயினும், தட்பவெட்பநிலைகளாலும், புவியியல் தன்மைகளாலும் ஒத்ததன்மை கொண்டதனை வட்டாரம் எனப் புவியியல் அறிஞர்கள் வகுக்கின்றனர். இதன் வாயிலாக ஒரே நிலப்பரப்பின் தன்மை அல்லது மக்கள் வாழும் பகுதியில் உள்ள இயற்கைச் சூழ்நிலைகளை மையமிட்டே வட்டாரம் பாகுபாடு செய்யப்படுகிறது.

“**ஆங்கில மொழியில் வட்டாரம் என்ற சொல்லுக்கு** Region, Province, Local **போன்ற சொற்கள் வழங்கப்படுகின்றன.** ‘Region’ **என்ற சொல்லுக்குப் பெரியதொரு தேசியப் பண்பாட்டிலிருந்து அந்தப் பரப்பில் அடங்கியுள்ள ஒரு பகுதியைப் பிரித்துக்காட்டும் தன்மை என்று சொல்லப்படுகிறது**” (The Encyclopedia America, Vol.XIII, P.1033). மேலும் வட்டாரம் என்பதற்கு இனங்காட்டக் கூடியனவாகத் தட்ப வெப்ப நிலை, மண்ணின் வளம், வட்டார மொழி வழக்கு, பண்பாட்டு வளர்ச்சி நிலை, பொருளாதார மாற்றம் ஆகியவை குறிப்பிடத்தக்க காரணிகளாகத் திகழ்கின்றன எனவும் பொருள் சொல்லப்படுகிறது. வட்டாரம் என்பது பரந்த நிலப்பரப்பில் உள்ள ஒரு பகுதி. அப்பகுதிக்கென்று தனித்த வாழ்க்கையும், வாழ்க்கை நெறிகளும், பண்பாட்டுப் பழக்க வழக்கங்களும் உண்டு என்பதனை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

வட்டாரமும், மொழி நடையும்

மொழி ஒரு சமூகத்தின் கருத்துப் பரிமாற்றக் கருவியாகும். மேலும் மனித சமூகத்தின் வாழ்க்கை மற்றும் பண்பாட்டு மாற்றத்திலும் மொழி சிறப்பிடம் பெறுகிறது. ஒரு வட்டாரத்தைத் தனியே பிரித்து இனங்காட்டக்கூடியதாக இருப்பது

வட்டாரமொழியும் அம்மொழி பேசும் மக்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களுமே, நாஞ்சில் நாட்டாரையும், தஞ்சாவூர்க்காரரையும், கொங்கு நாட்டாரையும், கரிசல் பகுதியினரையும் தனித்தனியே பிரித்து இனங்காட்டுவது அவர்களின் பேச்சுவழக்கும், மொழிநடை மற்றும் அவர்களின் பழக்க வழக்கங்களுமேயாகும். இம்மக்களின் வாழ்க்கை நிலையை வெளிக்கொணர என்னும் படைப்பாளிகள் அவர்கள் பேசும் மொழியையும், வாழ்க்கை முறைகளையும் நடப்பியல் தன்மை மாறாது கொண்டு வருவதில் பல முயற்சிகள் செய்து அற்றில் வெற்றியும் பெற்றிருக்கின்றனர்.

கு.அழகிரிசாமி, மேலாண்மை பொன்னுச்சாமி, வீர.வேலுச்சாமி, தமிழ்ச்செல்வன், பூமணி, தனுஷ்கோடி ராமசாமி, அழ.கிருஷ்ணமூர்த்தி, அ.முத்தானந்தம், சோ.தர்மன், கோணாங்கி, திடவை பொன்னுச்சாமி, சுயம்புலிங்கம், வே.சதாசிவன், காசிராஜன், பொ.அழகுகிருஷ்ணன், கே.ராமசாமி, பொன்.ராஜா, ரா.அழகர்சாமி, கௌரிசங்கர், பா.செயப்பிரகாசம், கி.ராஜநாராயணன் போன்றோர் கரிசல் வட்டாரப் படைப்பாளிகள் ஆவார்கள். இவர்கள் தங்களின் படைப்புக்களில் கரிசல் வட்டார வாழ்க்கை நிகழ்வுகளை வெளிப்படுத்துவதில் வெற்றி கண்டிருக்கிறார்கள்.

கி.ரா.வும் கரிசல் வட்டாரமும்

கரிசல் வட்டாரப் படைப்பாளியாக அறிமுகமான கி.ராஜநாராயணன் தம்முடைய படைப்புக்கள் ஒவ்வொன்றின் கதைக்கருவிற்காக வேறெங்கும் தேடி அலையவில்லை. தான் கேட்ட, உற்றுநோக்கிய செய்திகள், காட்சிகள், கருத்துக்கள், வாழ்க்கை நிகழ்வுகள் ஆகியனவே கதைக்களம் ஆயின. அக்கதைக்களத்துடன் வட்டார மரபை இணைத்துப் படைத்துள்ளார் கி.ரா.பின்னாளில் தமிழில் வட்டார இலக்கியத்தை வலுப்படுத்தியதில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார். தமிழ் இலக்கியத்தில் வட்டார இலக்கியத்தின் முன்னோடியாகப் புதுமைப்பித்தன் திகழ்ந்தாலும் அவரால் முழுமையாகத் தம்முடைய படைப்புக்களில் அவர் வாழ்ந்த வட்டாரத்தின் தன்மைகளை எடுத்துக்காட்ட இயலவில்லை. **“சொந்த முகமற்ற இரவல் கோலத்தில் அந்நியமாய் உலவிய தமிழ் இலக்கியச் சூழலில் மண்மனத்துடன் வாழ்வியல்புகளைச் சிறப்பாக முழுமையாக வெளிப்படுத்தியவர் கி.ரா” (பூமணி (க.ஆ), ராஜநாராயணீயம் கட்டுரைத் தொகுப்பு, ‘முன்னத்தி ஏர்’ ப.7)** எனப் பூமணி கூறுகிறார். பூமணி கூறுவதைப் போலவே கி.ரா.வும் தம்முடைய படைப்புக்களைத் தான் கண்ட காட்சிகளை வாழ்க்கையோடு போராடிக்கொண்டிருக்கும் மக்களின் பிரச்சினைகளை வட்டார மரபினை மையப்படுத்தியே வெளிப்படுத்தியுள்ளார். ‘கோபல்ல கிராமம்’ என்ற புதினத்தில் கம்மவ இனமக்கள் தெலுங்கு தேசத்திலிருந்து துலுக்க மன்னர்களுக்குப் பயந்து தமிழகம் வந்ததையும், வரும்போது அம்மக்கள் அடைந்த துயரினையும், பிழைப்புத்தேடி

வந்து ஓர் இடத்தினைத் தேர்வு செய்து அதனைத் தங்களின் வாழிடமாக அமைத்துக் கொண்டதையும் வெளிப்படுத்துகிறார்.

'கோபல்லபுரத்து மக்கள்' என்ற புதினத்தில் ஆங்கிலேயர்களின் வருகை, அதனால் மக்கள் அடைந்த துயர், ஆங்காங்கே ஏற்பட்ட கிளர்ச்சிகள், கலகங்கள், படையினரின் கொடூரச் செயல்கள், விடுதலை என அனைத்தையும் வெளிப்படுத்துகிறார். இவருடைய சிறுகதைகள் முழுவதும் வட்டாரத்தன்மையோடு தான் திகழ்கின்றன. 'கரிசல்காட்டுக் கடுதாசி' என்ற கதைத்தொகுப்பில் விவசாயிகள் படும் துயரினை விளக்குகிறார். 'நாட்டுப்புறக்கதைகள்' என்ற கதைத் தொகுப்பில் கரிசல் வட்டார மக்களிடம் வழங்கிவரும் வாய்மொழிக்கதைகள் மற்றும் அம்மக்களின் வாழ்க்கையிலுண்டான பிரச்சினைகளை எள்ளல் மற்றும் நகைச்சுவை தோன்றக் கூறியுள்ளதை உணரமுடிகின்றது.

வட்டார மரபில் கரு அமைத்தல்

விவசாயம் உலகமறிந்த தொழில் இது நகரத்தில் நடப்பதல்ல. கிராமத்தை ஒட்டியே இன்றும் நடந்துவருகிறது. விவசாயம் என்பதன் முழுமையான பொருளைத் தெரிந்தவர்கள் கிராம மக்களே. கரிசல் வட்டார மக்களின் வாழ்வில் பல்வேறு பிரச்சனைகள் இருந்தாலும் கி.ரா தம்முடைய கதைகளில் விவசாயம் மற்றும் விவசாயிகள் சார்ந்த பிரச்சனைகளுக்கே முன்னுரிமை கொடுத்துப் படைத்திருக்கிறார். இதற்கு அடிப்படைக் காரணம் தான் ஒரு விவசாயியாக இருந்தது தான். அதனால் தான் விவசாயத்தினால் தான் பட்ட துயரம், இழப்பீடு, பிரச்சினைகள் என ஒவ்வொன்றையும் தம் படைப்புக்களில் வட்டார மணம் கமழப் படைத்திருக்கிறார். கி.ரா தன் எதிரில் நடக்கும் வாழ்வியல் நிகழ்வுகளைத் தன் வட்டாரத்தன்மையோடு, வட்டார மொழியோடு எழுதுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கிறார். இதனை, **“இங்கே உள்ள பிரச்சனைகளையே எழுதித் தீரலை. இதை முடிச்சிட்டுத்தான் மத்த விசயங்கள் எல்லாம்” (விஜயலெட்சுமி ராஜாராம், வட்டார இலக்கியமும் கி.ராஜநாராயணனும், ப.86)** எனக் கூறுவதிலிருந்து, இவரது படைப்புக்களில் வரும் கரு மட்டுமல்ல களங்களும், பாத்திரங்களும், விவசாயச் சூழல்களும் மிகத் தெளிவாக எதார்த்தமாக வெளியிடப் பட்டுள்ளன என்பதை அறியமுடிகின்றது.

வட்டார மரபில் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை கருவாக அமைத்தல்

கி.ரா கரிசல் பகுதியில் வாழும் குழந்தைத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை மையப்படுத்திப் பல கதைகளை உருவாக்கியுள்ளார். கரிசல் பகுதி மக்கள் தங்கள் வாழ்க்கைக்காகத் தீப்பெட்டி செய்யும் தொழிலைக் குடிசைத் தொழிலாகக் கொண்டனர். அது இப்போது பெரிய தொழிலாகவே உருவாகிவிட்டது. இப்பகுதியில் வாழும்

வறுமைக்குள்ளான குடும்பங்கள் தங்கள் வாழ்க்கையை நகர்த்துவதற்காகத் தங்கள் பிள்ளைகளை இத்தொழிலில் ஈடுபடுத்துகின்றனர். அக்குழந்தைகளும் தங்களது குடும்பங்களின் வறுமை கருதிப் பள்ளிக்குச் செல்வதை மறந்து, சிறுவயதில் விளையாடுகிற விளையாட்டையெல்லாம் மறந்து தீப்பெட்டித் தொழிற்சாலைக்குச் சென்று வேலை செய்து வருகின்றன. அக்குழந்தைகளின் வருமானத்தில் அக்குடும்பம் நடக்கிறது.

குழந்தைத் தொழிலாளர்களின் பிரச்சினையை மையப்படுத்திக் கி.ரா 'ஒரு செய்தி' என்ற சிறுகதையைப் படைத்திருக்கிறார். இக்கதையில் குழந்தைகள் அதிகாலையில் எழுந்து அவசர அவசரமாகத் தீப்பெட்டித் தொழிற்சாலைக்குச் செல்லும் காட்சியைக் கண்டு வேதனைகொள்கிறார். அவற்றை, **"அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகள் பேருந்தின் ஒலி கேட்டதும் பதறி எழுவதையும், சோற்றுச் சட்டியை ஒரு கையிலும் மற்றொரு கையில் டப்பாவையும் வைத்துக் கொண்டு பாம்புப்புற்றுக்குள் நுழைவது போலப் பேருந்திற்குள் நுழைவதையும்" (விஜயலெட்சுமி ராஜாராம், வட்டார இலக்கியமும் கி.ராஜநாராயணனும்**, ப.307) எனக் காட்சிப்படுத்தியுள்ளதைக் காணலாம்.

மேலும், **"அவர் முன்னெல்லாம் அதிகாலை வேளைகளில் பட்சிகளின் இனிய ஒலிகளைக் கேட்டுத்தான் கிராமம் விழித்தெழும். கோழி கூப்பிடும் குரல்கூட இப்பொழுது மறந்து போய்விட்டது" (மேலது**, ப.307) என்றும், **"மாலை நேரத்தில் தெருக்களிலும், அம்மன் கோவில் மைதானத்திலும் குழந்தைகள் ஓடியாடும் விளையாட்டுக் கூச்சல்கள் கேட்டுக் கொண்டே இருக்கும். எத்தனை வகையான கிராமிய விளையாட்டுக்கள்" (மேலது**, ப.310) என்றும் ஒரு கிராமத்தின் சூழலை வாசிப்பாளனுக்கு அறிமுகப்படுத்துகிறார் கி.ரா. ஆனால் இன்று அந்தக் கிராமத்தின் இயற்கைச் சத்தங்களும், குழந்தை விளையாட்டுக்களும் மறைந்து பேருந்தின் ஒலி, தீப்பெட்டித் தொழிற்சாலையில் ஓடியாடி வேலைசெய்யும் குழந்தைகளின் ஆரவார ஒலி ஆகியவற்றையே கேட்க முடிகிறது என்று வருந்துகிறார். பரம்பரைத் தொழிலான விவசாயம் மறக்கடிக்கப்பட்டு இடையே வந்த சேர்ந்த தீப்பெட்டித் தொழில் வளர்ந்ததால் குழந்தைகளில் உடல்நலன் கெட்டுப்போனதோடு, சமூகஉறவுகளும் பாதிக்கப் பட்டிருக்கிறதே என்ற சீற்றம் இவரது கதைகளில் வெளிப்படுத்தியுள்ளதைக் காணமுடிகின்றது.

நாட்டுப்புறப் படைப்புக்களில் வட்டார மரபுகள்

நாட்டுப்புற மக்களிடமுள்ள வாய்மொழிக் கதைகளைச் சேகரித்துத் தொகுப்பாக நாட்டுப்புறக் கதைகள், கரிசல்கதைகள், தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள், தாத்தா சொன்ன கதைகள், வயது வந்தவர்களுக்கு மட்டும் எனப் பல கதைத் தொகுப்புகளை

வெளியிட்டுள்ளார். சிறுவர்களுக்காகச் சிறுவர்கள் சொல்லும் கதைகளையும் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். இக்கதைகள் யாவும் அம்மக்களின் வாழ்வியல் எதார்த்தத்தை உள்ளடக்கியிருக்கின்றன. மேலும், நாட்டுப்புறத்திற்கே உரித்தான பாடல்களையும் தம்முடைய கதைகளில் ஆங்காங்கே வெளிப்படுத்தியிருக்கிறார்.

“சோளம் இடிக்கையிலே

சொன்னபடி ஒரு வார்த்தை - ஐயோ

கையைப் பிடிக்காதிங்க - என்

கரு வலவி சேதமாகும்” . (கி.ரா. கோமதி, கி.ரா.கதைகள், ப.49)

என ஆணின் மீது பெண் கொண்ட ஏக்கத்தினை பதிவு செய்துள்ளார்.

“கொச்சி மலையாளம்

கொடி படரும் குற்றாலம்

கொடி படந்து ஏதுசெய்ய இப்போ

கொடி மன்னர் இல்லாம்” (கி.ரா.சாவு, கி.ரா. கதைகள், ப.31)

என இறந்தவர்களுக்காகவும் பாடப்பட்ட பாடல்களை வெளிப்படுத்தித் தன்னுடைய நாட்டுப்புற அறிவின் புலமையை வெளிப்படுத்தியுள்ளார் எனலாம்.

முடிவுரை

வட்டார மக்களின் வாழ்க்கை நிகழ்வினை மொழி, பண்பாடு, மரபு மாறாது பதிவு செய்து, வட்டார இலக்கியங்களை வளர்த்தவர்களுள் கி.ராஜநாராயணன் முன்னிருப்பதை உணரமுடிகின்றது. கரிசல் வட்டாரத்தில் பிறந்து மண்ணோடும் மக்களோடும் இரண்டறக் கலந்ததால் கி.ரா. தம் படைப்புக்களில் எதார்த்தைப் பதிவு செய்திருக்கும் பாங்கு போற்றுதற்குரியதாகும். கரிசல் வட்டார மக்கள் விவசாயத்தை மறந்து தீப்பெட்டித் தொழில் மீது ஈடுபாடு காட்டி வருவதைக் கண்டு வருந்தும் படைப்பாளரின் உள்ளம், அவரின் மன உணர்வினைக் காணமுடிகின்றது. பழமொழிகள், சொலவடைகள், நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள் என அனைத்துத் துறையிலும் சிறந்து விளங்கி பன்முகத்தன்மை கொண்ட படைப்பாளர் என்பதை உணரமுடிகின்றது.

துணைநூற்பட்டியல்

1. தி என்சைக்ளோபீடியா அமெரிக்கா, தொகுதி XIII, பி. 1033.
2. கே. ராஜநாராயணன், கதைகள், நியு செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, 2001.
3. விஜயலெட்சுமி, வட்டார இலக்கியம், மணிவாசகர் பதிப்பகம், மதுரை, 2007.
4. K.R.கோமதி K.ராஜநாராயணனின் கதைகள் நியு செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை 2010.